செ.வெ.எண்: 457 **செய்தி வெளியீடு** நாள்: 18.7.11

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் திருவாரூர் மாவட்டம் நன்னிலம் ஆகிய இரண்டு இடங்களில் தலா ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ஏற்படுத்த இன்று (18.7.2011) ஆணையிட்டுள்ளார்கள்.

உலகத் தரத்திலான உயர்கல்வியை அனைவரும் பெற வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழக அரசு உறுதியான உன்னத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, தமிழகத்தில் பின்தங்கிய மாவட்டங்களில் கல்லூரிகளைத் தொடங்கி கிராமப் புற ஏழை மாணவர்களும் கல்வியில் சிறந்து விளங்கி ஒளிமயமான வாழ்க்கையை அவர்கள் பெற்றிட வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.7.2011 அன்று தலைமைச் செயலகத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் மாவட்டம் – நெம்மேலி, தூத்துக்குடி மாவட்டம் – நாகலாபுரம், தர்மபுரி மாவட்டம் – அரூர், விழுப்புரம் மாவட்டம் – கள்ளக்குறிச்சி, விருதுநகர் மாவட்டம் – சாத்தூர், நாகப்பட்டினம் மாவட்டம் – வேதாரண்யம், வேலூர் மாவட்டம் – திருப்பத்தூர் மற்றும் திருவாரூர் மாவட்டம் – திருத்துறைப்பூண்டி ஆகிய ஒன்பது இடங்களில் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) தொடங்கி வைத்தார்கள்.

மேற்கண்ட கல்லூரிகளோடு, தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் திருவாரூர் மாவட்டம் நன்னிலம் ஆகிய இரண்டு இடங்களிலும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை இக்கல்வியாண்டிலேயே (2011-2012) ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த அறிவிப்பினால் அப்பகுதியைச் சேர்ந்த ஏழை, எளிய கிராமப்புற மாணவர்கள் தங்கள் பகுதியிலேயே உயர்கல்வி பெற வேண்டும் என்ற கனவு நனவாகியுள்ளது.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள் : 18.7.2011